தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக** கொலோசெயர் 3:16



செப்டம்பர் 2009

மரம் 9
கனி 10

ஆசிரியர்
B. அர்ஜூனன்

## யாக்கோபு - James




- புதிய ஏற்பாட்டில் இவன் எழுதிய நிருபம் 20-வதாக சேர்க்கப்பட்டுள்ளது.
- தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன் - யாக்.1:1
- சோதனையை சகிக்க ஆலோசனை சொன்னவன் - யாக்.1:12
- திருவசனத்தை கேட்டால் மட்டும்போதாது அதின்படி செயல்படவேண்டும் என்றவன் - யாக்.1:22
- உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்ற ராஜரிக பிரமாணத்தை நமக்கு நினைப்பூட்டியவன் - யாக்.2:8
- விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும் என்றவன் - யாக்.2:17
- நாவை அடக்க ஆலோசனை சொன்னவன் - யாக்.3:10
- பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்படியாக ஆலோசனை சொன்னவன் - யாக்.4:7
- நாம் நினைக்காத பாவத்தை சுட்டிக்காட்டுகிறவன் - யாக்.4:17
- ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் என்ற மேலான ஆலோசனை கொடுத்தவன் - யாக்.5:16

# கிறிஸ்துவின் வசனம்

## வழங்கும்

## தொலைக்காட்சி நிகழ்ச்சி






தமிழன் *TV* யில் திங்கள் காலை 6.00 - 6.15

இமயம் *TV* யில் புதன் காலை 6.30 - 6.45

### ரேடியோ நிகழ்ச்சி





இலங்கை ஆசிய சேவை *SW* 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**Website: www.thewordofchristindia.com**

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

*THE WORD OF CHRIST*

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 9 செப்டம்பர் - 200 கனி - 10


ஆசிரியருரை

## அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில்...

## When He was In The Days Of His Flesh



**ஆண்டவர் இயேசு மனிதனை இரட்சிக்க** மாம்சத்தோடும் இரத்தத்தோடும் வெளிப்பட்டார். "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்" என எபிரெய ஆசான் மிகத்தெளிவாக எழுதியிருக்கிறார் (எபி.5:7-10). அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் எப்படியிருந்தாரோ அப்படியே இன்று நீங்களும் நானும் இருப்போமானால் எத்தனை ஆசீர்வாதமாக இருக்கும்! இதை என்றாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? மாம்சத்தில் இருக்கும் நமக்கு அநேக மாதிரியை கர்த்தர் நமக்கு விட்டுச்சென்று உள்ளார்.

**முதலாவது, அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணினார் என்று வாசிக்கிறோம்.** நாம் இவ்விதமாக பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபிக்கின்றோமா? ஆண்டவர் இயேசுகிறிஸ்து மாம்சத்தில் இருந்த நாட்கள் முப்பத்தி மூன்றரை வருடங்கள். அதில் குறிப்பாக மூன்றரை வருட ஊழியங்களைப் பற்றி நான்கு சுவிசேஷகர்கள் எடுத்துரைக்கின்றனர். அந்த மூன்றரை வருட ஊழியங்களில் அவர் ஜெபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். நாம் நம்முடைய ஜீவிய நாட்களில் ஜெபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. காரணம் சதா வேலை, வேலை என்று அலைகின்றோம். அதில் நாம் திருப்தியடைகின்றோமா என்றால் இல்லை. அப்படியிருக்கும்போது நாம் ஏன்

ஆண்டவர் இயேசுவைப்போல ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது? அவர் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ள தேவனை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபித்திருக்கிறார். நம்முடைய கண்களில் கண்ணீர் வருகின்ற அளவிற்கு நாம் உருக்கமாக தேவனை நோக்கி ஜெபித்திருக்கிறோமா? ஆண்டவர் இயேசுவை மரணக்கட்டுகளிலிருந்து உயிரோடு எழுப்பியவர் தேவன். பேதுரு தமது பிரசங்கத்தில் குறிப்பிடும்போது; "ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந் தெழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்" என்கிறார் (அப்.3:15).

மேலும்; பல சமயங்களில் ஆண்டவர் இயேசு, பிதாவை நோக்கி ஜெபிக்கிறதை நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். யோவான் 17-ம் அதிகாரத்தில் "தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: பிதாவே" என்று ஜெபித்தார். சிலுவையின் கடைசி வேளையில் அவர் ஜெபிக்கும்போது; "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனைவிட்டார்" என்று லூக்கா23:46-ல் வாசிக்கின்றோம். ஆண்டவர் எந்த ஒரு சூழ்நிலையிலும் பிதாவை நோக்கி ஜெபிக்க தவறவில்லை. இன்று நாம் முதலாவது தேவனுடைய சமுகத்திற்கு செல்கிறோமா என்றால் அநேக வேளைகளில் நாம் முதலாவது தேவ சமுகத்திற்கு செல்ல தவறி விடுகிறோம். இதற்கு என்ன காரணமென்றால், சுயநம்பிக்கை அல்லது மற்றவர்கள் மீதுள்ள நம்பிக்கை. இந்த இரண்டுக்கும் அப்பாற்பட்டு கர்த்தர் பிதாவிடம் நம்பிக்கை கொண்டிருந்தார். ஆகையால், அவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் பிதாவை நோக்கி ஜெபித்தார். அவருடைய ஜெபம் கேட்கப்பட்டது.

**இரண்டாவது, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்.** பிதாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தவராகவும் தேவனுடைய சித்தம் செய்கிறவராகவும் இருந்தார். இன்றைக்கு கீழ்ப்படிதலை பற்றி பேசுகிறோம். ஆனால் ஆண்டவர் பிதாவுக்கு கீழ்ப்படிந்து இருந்ததுபோல கீழ்ப்படிந்து இருக்கின்றோமா என்றால் அநேக வேளைகளில் இல்லை. மற்றவர்களை பிரியப்படுத்த அவர்களுக்கு ஏற்றார்போல வாழுகின்றோம். முக்கியமான வேலைகளில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளைப் பிரியப்படுத்த முற்படுகின்றனர். கனவன் மனைவிக்கு எப்படிபிரியமாய் இருக்கலாம் என்று முயற்சிக்கின்றான். மனைவி கனவனுக்கு எப்படிபிரியமாய் இருக்கலாம் என்று முயற்சிக்கின்றாள். அதைப்போல ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கு பிரியமாய் இருக்கவே முயற்சிக்கின்றனர். ஆனால் கர்த்தருக்கு எப்படி பிரியமாய் இருக்கலாம் என்று முயற்சிப்பவர்கள் சிலர்தான். உங்களுடைய பிரியப்படுத்தல் யாரைப்பற்றியதாக இருக்கிறது? பிள்ளைகள் பெற்றாருக்கு கீழ்ப்படிந்து இருக்கவேண்டும். வேதமும் அவ்வாறே போதிக்கிறது. "பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப்

பிரியமானது" (கொலோ.3:20). அந்தப்படியே ஆண்டவர் இயேசுவும் சரீரத்தில் இருந்த நாட்களில் யோசேப்பு, மரியாள் ஆகிய இருவருடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் என லூக்கா 2:51-ல் வாசிக்கிறோம். ஆண்டவர் இயேசு பூமிக்குரிய பெற்றார்களுக்கு மட்டுமல்ல, பரலோக பிதாவாகிய தேவனுக்கும் கீழ்ப்படிந்திருந்தார். "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி.2:8). கீழ்ப்படிதல் என்பது வந்துபோகின்ற ஒன்றல்ல, அது நிலையானது. அவர் உலகத்தில் மனுஷரூபமாய் இருந்த நாட்களில் தமக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட பாடுகளை நிறைவேற்றும் வரை அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்திருந்தார். அவர் உன்னதமானவர், அதிசயமானவர், பிதாவோடு ஒன்றாயிருக்கிறவர், சமாதானகர்த்தர், வல்லமையுள்ளவர் நித்திய பிதா என்றெல்லாம் அவரைக்குறித்து வாசிக்கின்றோம். அப்படிப்பட்டவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல். பொதுவாக மேலான பதவில் இருக்கும் ஒருவரை கீழான பதவிக்கு அனுப்பினால் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால் உன்னதமான கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கினார். அப்படி அவர் வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்திருக்கும்போது நாம் எம்மாத்திரம்? உங்களை முழுவதுமாக தாழ்த்தி தேவ சமுகத்தில் ஒப்புக்கொடுங்கள். அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் ஒப்புக்கொடுத்ததைப்போல, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதையும் தேவ சமுகத்திற்கு கீழ்ப்படுத்துங்கள், அப்பொழுது எல்லையில்லா ஆசீர்வாதம் பெறுவீர்கள்.

**மூன்றாவது, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார் என்று வாசிக்கிறோம்.** ஆண்டவர் ஜெபிப்பதிலும், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதிலும் பூரணரானார். முழுமைக்கு என்றுமே முக்கியத்துவம் உண்டு. அவர் தமக்கு வந்த சோதனையில் வெற்றி கண்டார். பிதாவாகிய தேவன் என்னநோக்கத்திற்காக அவரை இப்பூமிக்கு அனுப்பினாரோ அதை அவர் செய்து நிறைவேற்றினார். அதுவே என் போஜனம் என்றார். ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. அதை நிறைவேற்றினால் தான் அவர்களுக்கு நிம்மதி. ஆண்டவருக்கு பிதாவின் சித்தம் செய்வதே நோக்கமாக இருந்தது. சீஷர்கள்கூட சிலவேளைகளில் பிதாவின் சித்தத்தை புரியாதவர்களாயிருந்தனர். ஆகையால் நீங்கள் தப்பான எண்ணம்கொள்கிறீர்கள் என்றார். ஆகையால் எபிரெய ஆசிரியர் எழுதும்போது; "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள்

மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றினதேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" என்று எழுதுகிறார் (எபி.1:1,2). ஆண்டவர் இயேசு பிதாவின் சித்தத்தை பூரணமாக நிறைவேற்றியபடியால் பிதாவாகிய தேவன் அவரை தம்முடைய வலது புறத்தில் வீற்றிருக்கும்படி அருள் செய்தார்.

இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு சகோதரனே, சகோதரியே, இயேசுவானவர் தமக்கும், தம்முடைய உபதேசத்திற்கும் கீழ்ப்படிகின்ற அனைவருக்கும் நித்திய இரட்சிப்பை கொடுக்க வல்லவராயிருக்கிறார். ஆகையால் தான் அவர் உபதேசிக்கும்போது, "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவா.6:47). நீங்கள் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறீர்களா? இன்றைக்கு அநேகர் பிதாவாகிய தேவன் இந்த உலகத்தில் யாரை அறிமுகம் செய்திருக்கிறாரோ அவருக்குச் செவிகொடாமல், உலகத்திற்கும் கட்டுக்கதைகளுக்கும் செவிகொடுத்து தேவனுடைய வழியை விட்டு விலகிப்போய்க்கொண்டிருக்கிறார்கள்.

அவர் இல்லாமல் இரட்சிப்பு இல்லை. பேதுரு தமது பிரசங்கத்தில் "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப்.4:12). இந்த இரட்சிப்பு ஆத்தும இரட்சிப்பு. மனிதன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை (அதாவது தன் ஆத்துமாவை) நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன என வேதம் கேள்வி எழுப்புகிறது. மனிதனுடைய ஆத்துமா காக்கப்பட அவன் இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்றுக்கொண்டு, அவர் வழி செல்லும்போது அவனுக்கு நித்திய இரட்சிப்பை கொடுக்க அவர் வல்லவராயிருக்கிறார். மேலும், "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி.7:25). இன்றைக்கு மரித்தவர்களும் மௌனத்தில் இறங்குகிறவர்களும் கர்த்தரை துதியார்கள். ஆனால், மரித்து உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு இன்றும் என்றும் நமக்காக விண்ணப்பம் பண்ணுகிறவராயும், எந்த ஆத்துமாவையும் முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். அழியாத ஆசாரியத்துவத்தை பிதாவாகிய தேவனிடத்தில் பெற்றிருக்கிறார். "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி **என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்** என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்" என்று எபிரெய ஆசான் தெளிவுபடுத்துகிறார் (எபி.7:17).

இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு சகோதரனே, சகோதரியே நீ மாம்சத்தில் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றாய்? உன்னதத்தின் தேவனுடைய குமாரன் நம்மைப்போல மாம்சத்தில் தோன்றி தம்மைத்தாமே தாழ்த்தி, பிதாவின் சித்தம் செய்கிறவராகவும், பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபிக்கிறவராகவும், அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார் என தியானித்தோம். அவர் எல்லோருக்கும் மூத்த குமாரனாக இருக்கிறார். உயிர்த்தெழுதலில் முதற்பலனாக இருக்கிறார். அவரைப்போல நாமும் மாம்சத்திலிருக்கும் நாட்களில் இருப்போமானால் உன்னதத்தின் தேவன் நம்மையும் அவரோடுகூட உயிர்ப்பிப்பார். ஆண்டவர் இயேசுவுக்குக் கீழ்ப்படியும்போது அளவில்லா ஆசீர்வாதம் பெறுவோம். இன்றே அவரைப்போல பேசிடவும், ஜெபித்திடவும், கீழ்ப்படியவும், தேவசித்தம் செய்யவும் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## வேத அறிவுப்போட்டி எண் 108 -ல் வெற்றிபெற்றவர்கள்


N. ஜான் செல்லையா-நியூ எல்லீஸ்நகர்
K.M. சாந்தி -வத்தலக்குண்டு
Bro. ஆனந்த் -மதுரை
Tmt. மரகதம் திரவியம்-கோம்பை
J. நிர்மலாஜான் -மதுரை
J. ஐசக் -திருநெல்வேலி
S. பாக்கியராஜ் -திண்டுக்கல்
K. மோகன்-B. கொமாரபாளையம்
M. சுதாகர் -கொடுமுடி
R. சாமுவேல் -ஊதியூர்
M. வேலு -வேலூர்
Mrs. மெல்சிடா-திண்டுக்கல்
V. கோவலன்- மதுரை
Mrs. எலியாம்மா-கடலூர்
Mrs. சுதா ஜோசப்-மதுரை
M. ஏஞ்சல்-பெருந்துரை
A. பூங்கோதை-கோபி
J. பேசில் தேவசகாயம் - மதுரை
K. தங்கவேல் - பாண்டி
K.M. ஜான் - ஜெயங்கொண்டம்
K. ஆபிரகாம் - கலக்காடு
V.F. ஷர்லோ - பாண்டி
Mrs.ஜாய் கிறிஸ்டினா - நாகமலை
E. ஜோசப் தேவதாஸ் - நாகமலை
Sis. குளோரிஃபவுல்சர் - சென்னை
Mr. ஜேபெஃர்சன் எட்பெர்க் பாண்டியன்-காளையார்கோவில்
Mr. இவான் லெண்டில் பாண்டியன்-காளையார்கோவில்
A. ஜோதிகாந்தம்-போடப்பாறை

## வேத அறிவுப்போட்டி எண் 108 -ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. ஆமோஸ் | -ஆமோ.8:11 | 6. ஆவிக்குரிய | -1கொ.15:44 |
| 2. கலாத்தியர் | -கலா.4:14 | 7. சமாரியா, எருசலேம் | -எசே.23:4 |
| 3. ஓசியா | -ஓசி.10:13 | 8. இல்லை | -ரோம.9:31 |
| 4. பவுல் | 2கொ.10:9 | 9. முடிவில்லை | -புல.3:22 |
| 5. தானியேல் | -தானி.2:46 | 10. தீமோத்தேயு | -அப்.16:1 |

# வழிநடத்துனர்கள் தேவை
## Leaders Needed

*J.C.Choate*



சபையில் இன்று நம்முடைய மிகப்பெரிய தேவை சபையை வழி நடத்துனர்கள் தான். சத்தியத்திற்காக உறுதியாக நிற்கிறவர்களும், வேதாகமம் போதிக்கிறவற்றை அறிந்து, உண்மையாக மனந்திரும்பிய மனிதர் நமக்குத் தேவை. உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் வேதாகமத்தைக் குறித்துப் பிரசங்கிக்கிற ஆர்வமுடைய உலகதரிசனம் கொண்ட மனிதர் நமக்குத் தேவை. பிரசங்கம் செய்து, அதன்படி கிரியை நடப்பிக்கும், மேலும் சகோதரசிநேகம் கொண்டுள்ள மனிதர் நமக்குத் தேவை. உறுதியான விசுவாசமும், மனிதருடைய ஆத்துமாக்களை நேசிக்கிறதும், கர்த்தருக்காகவும் அவருடைய வேலைக்காகவும் நேரம் ஒதுக்குகின்ற மனிதர் நமக்குத் தேவை. இப்பேர்பட்ட போதிய மனிதர்களால், சபை வளர்ந்து, உலகமுழுவதும் சுவிசேஷம் பரம்பும். இவர்களல்லாமல், நாம் ஸ்தம்பித்துவிடுவோம்.

ஸ்திரீகள் வித்தியாசமான பங்கினைப் பெற்றுள்ளனர், அவர்கள் தங்களுடைய சொந்தப் பகுதியில் சுவிசேஷப்பணியை மேற்கொள்ளவேண்டும். அவர்கள் பகிரங்கமாகக் குழந்தைகளுக்கும், பாலிய ஸ்திரீகளுக்கும் மற்ற ஸ்திரீகளுக்கும் போதிக்கலாம். அவர்கள் நல்ல மனைவிகளாகவும், தாய்மார்களாகவும், சபையில் புருஷர்களுக்கு உதவியாகவு மிருக்கலாம். அவர்கள் உபசரிக்கிறதன் மூலமும் பிரயாசப்பட்டு போதிப்பதன் மூலமும் உறவினர்களையும், அண்டைவீட்டார்களையும், நண்பர்களையும் ஆதாயப்படுத்தலாம். இப்பேர்பட்ட ஸ்திரீகளுடைய ஈடுபாடில்லாமல் சபை அதிகமாக ஒன்றும் செய்யப்போகிறது மில்லை, மிக அதிமாக வளர்ச்சியடையப் போகிறதுமில்லை.

தேவன் நியமித்தபடி புருஷர் ஸ்திரீகள் இருவரும் செய்யும்படிக்கு தங்களுடைய சொந்த வேலையை உடையவர்களாயிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும் என்பதே இன்றைய உலகத்தின் சவாலாயிருக்கிறது. ஒருவர் இன்னொருவருடைய பணியை செய்ய முயலும்போது, பிரச்சனைகள் நேரிடுகிறது. இதனால்தான் தேவன் தனித்தனியாக வேறுபட்ட தலைமைத்துவ பங்கினைக் கொடுத்தார். ஒவ்வொருவரும் மற்றொருவரை மதித்து தேவன் அவர்களுக்கென்று கொடுத்த பணியினை அவர்கள் செய்கிறபோது, அங்கே இன்னமும் வளர்ச்சி ஏற்படுகிறது. இல்லையென்றால் அங்கே போட்டியும் தோல்வியும் ஏற்படுகிறது.

சபை இன்று வழிநடத்துனர்களின் பெரிய தேவையிலிருக்கிறது. மூப்பர்கள், உதவிக்காரர்கள், பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் போன்ற வழிநடத்துனர்கள் இல்லாமல் சபை வளர்ச்சியடையாது சமயம் கிடைக்காதவர் அல்லது வழிநடத்துவதற்கு சமயத்தை ஏற்படுத்திக் கொள்ளாதவர் என மிக அதிகமானோரை நாம் கொண்டிருக்கிறோம். நாம் கர்த்தருடைய வார்த்தையை அறியாதவர்கள் மற்றும் சபையின் ஊழியத்தை அறியாதவர்கள் என மிக அதிகமானோரை கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, உண்மையான வழிநடத்துகிறவர்களின் ஊழியம் கூடுமிடத்தைக் கொடுப்பதிலும் திறந்த வாசல்களை ஏற்படுத்துவதிலும் அதிகமாயிருக்கிறது. சபையை வழிநடத்துகிறவர்கள் அடிக்கடி செய்வது போல, விளையாட்டு பந்தயம், வியாபாரம், அரசியல் போன்றவற்றில் பொறுப்பாளிகளாயிருப்பவர்கள் தங்களுடைய பணியை செய்வார்களானால், அவர்கள் முழுவதும் தோற்றுப்போவார்கள். திட்டமிடாத இலக்குகளை நிர்ணயிக்காத, அர்த்தமில்லாத வேலைகள் இருக்கின்ற இடத்தில், செய்து நிறைவேற்றமுடியும்?

நம்முடைய தோல்விகளுக்கு நாம் மன்னிப்புக்குமேல் மன்னிப்பு அளிக்கின்ற இடத்தையே வந்தடைந்திருக்கிறோம். நாம் ஜனங்கள் ஆர்வமில்லாதவர்கள் என்றும் மதஉலகம் கவனிக்காது என்றும், ரேடியோ பிரசங்கத்தினால் பணமும், நேரமும் வீணாகிறது என்றும், ஜனங்கள் வாசிக்கமாட்டார்கள் என்றும், ஆனபடியால் நாங்கள் வெறுமனே உட்கார்ந்து மரிக்க தயாராக இருக்கிறோம் என்றும் நாமாகவே சொல்லிக்கொள்கிறோம். இது வழிநடத்துதலா? இது வழிநடத்துதலாகாது. கர்த்தருடைய ஜனங்கள்தாமே இவ்வாறு நடந்து கொள்வது சரியான வழியல்ல.

உண்மையாக வழிநடத்துகிற ஒருவன் தன் ஊழியத்தை விட்டுவிட்டு வெளியேற மாட்டான். ஊழியத்தின் ஒரு நல்ல கனியைத்தராவிட்டால், அவன் இன்னொரு வழியில் முயலுவான். அவன் தேடுவதிலும், ஜெபிப்பதிலும், ஊழியஞ்செய்வதிலும் ஊழியம் நிறைவேற்றப்படும்படி இன்னொன்றை கண்டு கொள்ளும்வரை தொடர்ந்து செயல்படுவான். அவன், "மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்...." (மாற்.10:27) என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவுகூருவான்.

கவனியுங்கள்! உலகம் பாவத்தில் கிடக்கிறது. நாம் கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கமாகிய - சுகமாக்கும் மருந்தினை கொண்டிருக்கிறோம். இந்த மருந்து போதுமான ஜனங்களை சென்றடைந்து பாவிகளின் பெரிதான தேவை அறிவுறுத்தப்பட்டு, சரியான வழியில் கொடுக்கப்பட்டால், அங்கே பதில் கிடைக்கும். இல்லை, நாம் சத்தியத்தை விட்டுக் கொடுக்கவோ, தவறை போதிக்கவோ, கிருபையை மட்டும் பிரசங்கிக்கவோ அல்லது சுவிசேஷத்தை சர்க்கரை தடவிக்கொடுப்பதற்கு ஓராயிரம் காரியங்களைச் செய்யவோ வேண்டியதில்லை. நாம் கர்த்தருடைய நாமத்தை மறுதலிக்கவோ,

பிரிவினை சபைகளில் இணையவோ அல்லது சமூக சபைகளை ஸ்தாபிக்கவோ வேண்டியதில்லை. சத்தியத்தை தனிப்பட்ட நம்பிக்கையோடு பிரசங்கித்து நாம் போதிக்கிறவர்களை நேசிப்பதே நாம் செய்யவேண்டியவைகள் ஆகும்.

இயேசு நாம் உலகமுழுவதும் சென்று சகல சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென சொன்னார் (மாற்.16:15,16). அவர் அதைச் சொன்னாரா அல்லது இல்லையா? அவர் அதைச் சொன்னாரென்றால் அவர் சொன்னபடி நாம் செய்யவேண்டியவற்றை கட்டாயமாக செய்து கொண்டிருக்கிறோமா? நாம் செய்யாவிட்டால், நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து கொண்டிருக்கிறோமா? நாம் அவருக்குக் கீழ்ப்படியவில்லையென்றால், நாம் ஆவிக்குரிய வழிநடத்துபவர்கள் என்று நம்மால் எவ்வாறு சொல்ல முடியும்?

வழிநடத்துனர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் வழிநடத்துவார்கள், சுவிசேஷப்பணியின் முழு இலக்கின் மேல் தங்கள் கண்களைப் பதித்தவர்களாயிருப்பார்கள், அப்போது தான் சபை கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்றமுடியும். இதைச் செய்கின்ற போதுமான வழிநடத்துனர்கள் இருக்கையில், உலகம் வேதாகம அறிவைப் பெற்றிருக்கும். நாம் ஒப்புக்கொடுக்காவிட்டால், கர்த்தர் நாம் செய்யும்படிக்கு நம்மை அவர் தகுதிப்படுத்தமாட்டார் ஏதோ சிலவற்றைச் செய்யும்படி நம்மைக் கேட்கிறவருமல்ல.

வழிநடத்துனர்களாயிருப்பதற்கு, நாம் ஏராளமான பணம் வைத்திருக்கவோ, நாம் பெரிய பிராந்திய சபைகளைக் கொண்டிருக்கவோ அல்லது கல்வியில் உயர்ந்த பட்டங்களைப் பெற்றிருக்கவோ தேவையில்லை. நம்முடைய தேவையெல்லாம் கர்த்தர், சத்தியம், விசுவாசம், அன்பு, ஆர்வம், தரிசனம், ஞானம், மற்றும் இலக்கிற்கான முழு ஒப்புக்கொடுத்தல் போன்றவைகளே ஆகும்.

கர்த்தர் செய்யும்படிக்கு நம்மை கேட்டுக் கொண்டிருக்கிற ஊழியத்தை நாம் செய்ய அவர் எல்லாவித ஏதுக்களையும் நமக்குத் தந்தருளியிருக்கிறார். நாம் பிராந்திய சபைகள் ரேடியோ, டி,வி மற்றும் இலக்கியம் போன்ற வசதிவாய்ப்புகளைக் கொண்டிருக்கிறோம். தேவசெய்தியை வெளிக்கொணருவதற்கு ஏதுவான இன்டர்நெட், ஒலிநாடாக்கள், வீடியோக்கள், DVD க்கள் மேலும் அளவில்லா மற்ற ஊடகங்கள் அனைத்தும் நமக்கு உதவியாக இருக்கின்றன. நாம் சுவிசேஷக் கூட்டங்களை ஒன்று அல்லது 3 நாட்களுக்கும் மேலாக நீண்ட நேரமும் அதிக பயனளிக்கும் வகையில் வீட்டிலும், பெரிய நகரங்களில் முகாம்களையும், மருத்துவனைகளிலும் மருத்துவ கிளினிக்குகளிலும், வியாபார ஸ்தலங்களிலும் வாகன ஓட்டுனருக்குகென்று அமைக்கப்பட்ட சாலை ஓரங்களிலும், உணவகங்களிலும் இலக்கிய நூலை வைத்தும், ஜனங்கூட்டங்களை சென்றடையும்படிக்கு வேதாகம தபால்வழி பாடத்தினை பயன்படுத்தியும், நகரங்களிலும் சமுதாயத்திலும், பிரச்சாரம் செய்து நம்மோடு தனிப்பட்டவிதத்தில் வேதத்தைக் கற்று நம்முடைய கூட்டங்களில் பங்குபெற ஜனங்களை நாம் உற்சாகப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நாம் இந்தப் பணியைச் செய்ய நாம் இவ்வாறு செல்கையில், எதிர்ப்புகளையும், உபத்திரவத்தையும் கூட நாம் சந்திப்போம், ஏனென்றால் பிசாசு போரிடுவான், ஆனால் இந்த எதிர்ப்புகூட முன்பு எப்போதுமில்லாதவாறு சுவிசேஷம் பரவுவதற்கு உதவியாயிருக்கும். இதே தான் முதல் நூற்றாண்டில் நடந்தேறியது, நாம் செய்யும்படி தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற பணியை நோக்கி மாத்திரம் முன்னேறி சென்றால் இதே தான் இன்றும் நடந்தேறும்.

நாம் வெறுமனே உட்கார்ந்து கொண்டு, நம்முடைய ஊர் ஜனங்களுக்கும் உலகத்திற்கும் சத்தியத்தை எடுத்துச் செல்ல மறுக்கிறவர்களாயிருக்கும் போது, நாம் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ பாதுகாப்பிலிருந்து மனிதவர்க்கத்தைப் பிடுங்கிக் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம். அதன் விளைவாக, அவர்கள் இழந்து போனவர்களாகவும், நாம் பரிதாபகரமாக கர்த்தரை இழந்து விடுவதால் நம்முடைய சொந்த ஆத்துமாவும் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும்.

சகோதரரே, உலகம் மரிக்கிற வேளையில் சபை வளர்ச்சியற்று சோம்பலாய் இருக்கட்டும் என்றும், போதும் போதும் என்றும் இனிமேலும் வெறுமனே உட்காராதிருக்க தீர்மானிப்போமா? நம்முடைய ஆவிக்குரிய மந்த நிலையினால் பிறருடன் பேசி உண்மையை வெளிப்படுத்த பயந்து வெட்கப்பட்டுக் கொண்டிருப்பதற்கு மாறாக மத உலகில் நாம் எப்போது எழுந்து வழிநடத்தும் குரலாக இருக்கப் போகிறோம்? நமது கர்த்தர் யூதாவின் **சிங்கம்** என புகழப்பட்டவர் அல்லவா! நாம் அவருடையவர்களானால், நாம் துணிச்சலான இருதயங்களைக் கொண்டிருக்க வேண்டும்!

நீங்கள் ஒரு வழிநடத்துனரா? முழங்காலில் நின்று தேவன் உங்களுக்கு உதவும்படி கேளுங்கள், மேலும் உங்களுடைய உடன் வழி நடத்துனர்களும் கர்த்தர் உங்களுக்கு முன் வைத்த திறந்த வாசலைக் காணட்டும். அதன் பின் **"அதன் உள்ளே செல்லுங்கள்"**! தொடர்ந்து செல்லுங்கள்!

"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" (லூக்.10:2).

**ஜெபியுங்கள்**

- ✧ 27-ம் தேதி கொடைக்கானலில் நடைபெறும் சுவிசேஷகூட்டத்திற்காக...
- ✧ World Evangelism நடத்தும் மூன்று நாள் Kodaikanal Retreat-க்காகவும் ஜெபியுங்கள்...
- ✧ தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் அலுவலகப்பணிக்காக...
- ✧ இவ்வூழியத்தை தாங்கும் குடும்பங்களுக்காக...



பெண்கள் பகுதி

# நாளை மீண்டும் முயலுவேன் இவ்வுலகை மேற்கொள்ள

# Tomorrow I`ll Grapple again with the world

நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள
தவறு என்ற காரியங்களோடே
மற்றும் ஒருபோதும் சரியில்லாதவற்றோடே;
நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள,
அன்பின் தேவனே, இன்றிரவு நான் ஓய்வெடுக்கட்டும்.

நான் இந்த நல்வேளையை,
அநுபவிக்கட்டும்,
இந்த மலைகளையும், வானங்களையும்
நீரோடைகளையும்,
நீண்ட, நெடுநாளின் துதிகீதங்களை கவனிப்பேன் நான்
மற்றும் இன்னொரு உலகக் கனவுகளில் விழித்திருப்பேன்;
இறுக அணைத்துக்கொள்வேன் இந்நிமிடங்களை எனக்காக

-ஒவ்வொன்றாக எண்ணுவேன் அவைகளை-
பொக்கிஷமாக வைப்பேன்
அன்பு இருதயங்களின் மனமார்ந்த அன்பினை
வெது வெதுப்பான அஸ்தமிக்கும் சூரியனோடே;
நான் விண்மீன்களை சென்றடைவேன்
மாலை மயங்கும் ஆகாயத்துனுள்
அவைகளை மென்மேலும் இழுத்துகொள்வேன்
என் ஆன்மாவினுள்
வருங்காலத்தைப் பற்றியிருக்கும் எந்த
மந்தாரத்தையும் பிரகாசிப்பிக்க.

நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள,
தவறு என்ற காரியங்களோடே
மற்றும் ஒருபோதும் சரியில்லாதவற்றோடே-
நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள,
அன்பின் தேவனே, இன்றிரவு நான் ஓய்வெடுக்கட்டும்.

*-Betty Burton Choate*

# அதிக நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்த ஸ்திரீ

## The Woman Who Had To Wait For A Long Time

*J.Glory Arjunan*



எலிசபெத் ஒரு யூத ஆசாரியனின் மனைவி அவளைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பது நமக்கு மிகவும் அவசியம் எனக் கருதுகிறேன்.

**அவளுடையகுணம்:** அவளுடைய குணம் எப்படிப்பட்டதாய் இருந்தது? லூக்கா1:6-ல் அவள் தேவனுக்கு முன்பாக **நீதியுள்ளவளாயிருந்தாள்** என விவரிக்கப்பட்டுள்ளது. மனிதர் பார்வையில் நீதியுள்ளவர்களாக தங்களைக் காட்டுவதற்கு சிலர்மாய்மாலமான செயல்கள் செய்வர். மனிதர்களைப் பிரியப்படுத்த சிலர் வேஷம் போடுவர் வெளித்தோற்றத்தில் நீதியுள்ளவர்களைப் போல் தங்களை காண்பிப்பர். ஆனால் எலிசபெத்தோ தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாயிருந்தாள். அப்படியானால் மனிதர் பார்வையில் நீதியுள்ளவர்களாயிருப்பதோ? தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருப்பதோ? எது எளிது? நம்மால் நீதியுள்ளவர்களாய் நடக்க முடியுமா? ரோமர்3:10..... "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்கிறது. பிலிப்பியர்3:8,9-ல் "...என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத் தினால் வருகிற **சுயநீதியை** உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான **நீதியை** உடையவானாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கு...." என பவுல் கூறுகிறான். அநேக ஸ்திரீகள் நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவை அறியாமல், மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாமை, பொய் சொல்லமை, திருடாமை, உதவிசெய்தல், இரக்கஞ்செய்தல் போன்ற நற்கிரியைகளைச் செய்து சுயநீதியுடைவர்களாயிருக்கின்றனர். ஆனால் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வரும் நீதியைக் குறித்து அறியாதவர்களாய், கிறிஸ்துவுக்குள் வராதவர்களாய் காலத்தைக் கழிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திகளும் கூட பழைய பாரம்பரியங்களில் நியாயப்பிரமாணத் தினால் வரும் சுயநீதிக்குக் கீழ்ப்பட்டு, கிறிஸ்துவின் கிருபைக்குக் கீழ்ப்படியாமலும், அவருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கும் என்ற விசுவாசத்தினால் வருகிற நீதியைப் பெறாமலும் இருக்கின்றனர். அன்பு

சகோதரிகளே, நம்மை நாமே சோதித்துப்பார்ப்போம். உண்மையாகவே பவுல் கூறியதுபோல் கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று ஒதுக்கிவிட்டு விசுவாசத்தினால் வருகிற நீதியைப் பெற்று எலிசபெத்தைப்போல் தேவனுக்கு முன்பாக (மனுஷருக்கு முன்பாக அல்ல) நீதியுள்ளவர்களாய் இருப்போம்.

**அவளுடைய வீடு:** அது ஒரு அமைதியான வீடா? சமுதாயத்தின் பார்வையில் அவள் வீடு நிறைவுள்ளதாயிருந்ததா? குடும்பமென்றிருந்தால் அதில் ஒரு குழந்தையாவது இருக்கவேண்டுமென சமுதாயம் கூறுகிறதே! லூக்கா1:7-ல் அவள் மலடியென்றும், வயது சென்றவளாயிருந்தாள் என்றும் கூறப்படுகிறது. அப்படியானால் எலிசபெத்தும் அவள் புருஷனும் குழந்தையில்லாமல் போனதினால் உண்டான ஏமாற்றத்தில் எப்படியிருந்திருப்பார்கள்? சமுதாயத்தின் ஏச்சு பேச்சுக்கெல்லாம் ஆளாயிருப்பார்கள். ஆனாலும் அவர்கள் என்ன செய்தார்கள்? லூக்கா1:13-ல் அவர்கள் தேவனை நோக்கி பல வருடங்களாக வேண்டுதல் செய்தார்கள் என தெளிவு படுத்துகிறது. எனவே தான் அவ்வசனத்தில் கர்த்தருடைய தூதன் "....சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்....." என்றான். பல வருடங்களாக பிள்ளையில்லாத குடும்ப வாழ்க்கையில் கர்த்தர் ஒரு குழந்தையை வாக்குப் பண்ணுகிறார். சாதாரணமாக, நாம் பல காரியங்களுக்காக தேவனை நோக்கி ஜெபிக்கிறோம். நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கவில்லையென்றால் ஜெபிப்பதை நிறுத்தி விடுவோம். ஆனால் இந்த தம்பதியாரோ வயது சென்ற போதும் வேண்டுதலை நிறுத்தவில்லை போலும். எனவே தான் கர்த்தருடைய தூதன் 'உன் வேண்டுதல் கேட்கப்பட்டது' என்றான். எலிசபெத் வயது சென்றவளாயிருந்தபடியினால் தேவனால் அவர்களுக்கு ஒரு குழந்தையைக் கொடுப்பது கூடாத காரியமாயிருந்ததா? இல்லை. "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" (வச.27). இதுமாத்திரமல்ல "தேவனாலே எல்லாம் கூடும்". நாம் செய்ய வேண்டியதென்ன? நாட்கள் கடந்தாலும், வருடங்கள் கடந்தாலும் நம் வேண்டுதலை தேவனுக்குத் தெரியப்படுத்திக் கொண்டேயிருக்கவேண்டும். கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.

**அவளுடைய புருஷன்:** எலிசபெத்தின் புருஷனாகிய சகரியா எருசலேமில் தன் ஊழியத்தை நிறைவேற்றி ஊமையாகத் திரும்புகிறான் (லூக்.1:8-23). அன்பு சகோதரியே, இப்படிப்பட்ட நிலையில் தன் புருஷனை ஏற்றுக் கொள்ளவும் பேசமாட்டாத அவனுடன் கூடி வாழவும் எலிசபெத்திற்கு என்ன குணங்கள் தேவைப்பட்டிருக்கும்? தேவ பக்தியுள்ள, தேவனுடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் கைக்கொண்டிருந்த அவளுக்கு நிச்சயம் தேவனுடைய சித்தம் எதுவாயிருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் குணம் தான்

தேவைப்பட்டிருக்கும். சில சகோதரிகள் சந்தோஷமான சூழ்நிலையில் அதிகமான பக்தி வைராக்கியத்துடனிருப்பர். ஏதாவது கஷ்டமோ, துன்பமோ நேரிட்டால் அவர்களிடமிருந்த விசுவாசம் பறந்து போய்விடும். விசுவாசத்தை மட்டும் மறுதலிக்க மாட்டார்கள், தேவனையே தூஷிக்கவும்கூட செய்வர்கள். யோபுவின் மனைவி, யோபுவுக்கு நேரிட்ட பயங்கரமான சோதனையைப் பார்த்து: "…..நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்" (யோபு2:9). அநேகர் கூட தங்களுடைய புருஷர்களுடைய உத்தம ஊழியத்தை நினைத்து கர்த்தரை ஸ்தோத்தரிக்காமல், ஏமாற்றங்களும், துயரங்களும், துன்பங்களும் ஏற்படுகிற சமயத்தில் சலித்துக் கொண்டு, குடும்பத்தில் பிரச்சனை ஏற்படக் காரணமாகின்றனர். சகரியா ஒரு சிறந்த ஊழியன், ஊழியத்தை நிறைவேற்றி சரீரத்தில் ஒரு ஆசீர்வாதத்தை இழந்தவனாய் திரும்புகிறான். ஆனால் எலிசபெத்தோ தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாயிருந்தபடியினால் சந்தோஷத்துடன் கூடி வாழ்ந்தாள்.

**அவளுடைய விருந்தாள்:** இயேசுவின் தாயாகப் போகவிருந்த மரியாளிடத்தில் எலிசபெத் அதிக அன்புள்ளவளாயிருந்தாள். எனவே தான் நடக்கவிருக்கிற இரகசியத்தை அறிந்தவளாய், "……எலிசபெத் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது" (லூக்.1:42,43) என்றாள். இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்று பயந்த மரியாளிடம் எப்பேர்பட்ட அன்பு காட்டியிருக்கிறாள் இந்த எலிசபெத்! மரியாளை வாழ்த்தி உபசரித்ததிலிருந்து (லூக்.1:42-45) என்ன குணம் தெளிவாகிறது? அன்புக்குப் பொறமையில்லை, தற்பெருமையுமில்லை என்ற குணம் தெளிவாகிறது. ஆம், எலிசபெத்தோ, வயது முதிர்ந்த ஒரு ஊழியக்காரி, தேவனுடைய சகல நியமங்களையும் கைக்கொண்டு நடந்தவள், தன்னைக்காட்டிலும் வயதில் குறைந்தவள் மரியாள், தன்னிலும் மேன்மையுள்ளவள், ஆண்டவருடைய தாய் என பரிசுத்த ஆவியினால் அறிந்து அவளைப் புகழ்ந்தாள். இது மற்றவர்களின் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாத குணமல்லவா? கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருக்குமானால் நாமும் எலிசபெத்தைப் போல் காணப்படுவோம். எலிசபெத்திடமிருந்த இந்த நற்குணம் இல்லையென்றால் நிச்சயமாகவே நமக்குள் கிறிஸ்துவின் ஆவி இல்லை என்று தான் அர்த்தம். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல".

**அவளுடைய மகன்:**எலிசபெத் பல வருடங்களாகக் காத்திருந்து, தேவசித்தம் செய்தபடியினால் ஸ்திரீகளிடத்தில் பிறந்தவனிலும் யோவான்ஸ்நானனைப் போல் ஒரு தீர்க்கதரிசி இல்லை என்றும், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும மேன்மையுள்ளவன் என்று இயேசுவே சாட்சி பகர்ந்த மகனை பெற்றெடுத்தாள். யோவான் ஸ்நானனைக் குறித்து பல காரியங்கள்

முன்னறிவிக்கப்பட்டன. விருத்தசேதனம் பண்ணின நாளில் லூக்.1:60 "....அதற்கு யோவான் என்று பேரிட வேண்டும் என்றாள்". அவளுடைய இந்த காரியம் நமக்கு எதை வெளிப்படுத்துகிறது? இந்த பெயரை தேவதூதன் சகரியாவிடம் முன்னறிவித்திருந்தான். சகரியவோ தாம் ஊமையாயிருந்த போதும் தன் மனைவியிடம் இதைக்குறித்து ஏதோ ஒரு வழியில் தெரிவித்திருக்கவேண்டும். எனவே தான் தன் புருஷனோடு கூட தானும் தேவசித்தம் செய்ய வேண்டும். தேவதூதனால் அறிவிக்கப்பட்ட நாமம் தரிக்க வேண்டுமென தேவசித்தம் செய்வதில் கவனமாயிருந்தாள் எனத் தெரிகிறது. அத்தோடு கூட ஒரு பக்தியுள்ள தாயாகவும் அவளிருந்திருக்கிறாள். ஆனபடியால் கர்த்தருடைய கரம் தன் தாய் தந்தையாரிடம் இருந்ததுபோல யோவானிடமும் இருந்தது.

அன்பு சகோதரியே, நம் வேண்டுதல்களை கர்த்தருக்குத் தெரியப்படுத்துவது மட்டுமல்ல, கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியும், நியமங்களின்படியும் தேவனுக்கு முன்பாக விசுவாசத்தினால் வரும் நீதியை பெறும்படிக்கும் வேண்டுதல்கள் கேட்கப்படும்படிக்கும் காத்திருக்கவேண்டும். எலிசபெத்தின் இந்த நல்மாதிரியை நாமும் பின்பற்ற தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக!.

## பொது அறிவுச் சோதனை


1. நதியில் நீரின் ஓட்டத்தை கணக்கிடும் அளவுகோல் எது?
   அ)கர்ஸெக் ஆ)எர்க்ஸ் இ)க்யூசெக்
2. இந்தியாவின் வர்த்தக தலைநகரம் என்று அழைக்கப்படுவது எது?
   அ)சென்னை ஆ)மும்பை இ)கொல்கத்தா
3. மனித உடலில் உள்ள மிகச் சிறிய சுரப்பி எது?
   அ)தைராய்டு ஆ)அட்ரினல் இ)பங்கிரியாஸ்
4. நமது அரசியலமைப்பு சட்டம் எத்தகையது?
   அ)நிலையானது ஆ)நெகிழ்ந்து கொடுக்கக் கூடியது இ)நடைமுறைக்கு ஒவ்வாதது
5. நீரில் கரையும் வைட்டமின் எது?
   அ)வைட்டமின் -ஏ ஆ)வைட்டமின் -கே இ)வைட்டமின் -பி

விடைகள்: 1.க்யூசெக் 2.மும்பை 3.தைராய்டு 4.நெகிழ்ந்து கொடுக்கக்கூடியது 5.வைட்டமின் -பி.

*"இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" (சங்.127:4).*

# சபையை வளர்ப்பது எப்படி?

## How to grow a Church? *-David Tarbet*



அநேக பிராந்திய சபைகள் தாங்கள் வளர்ச்சியடைய விரும்புகிறதாகக் கூறுகிறது. சபையை வழிநடத்திச் செல்பவர்கள் இலக்குகளுடன் சவால் விடுகின்றனர்-இலக்குகள் நிறைவேற்றப்படக்கூடியவையாகவும் நிதானமானவையாகவுமிருக்கின்றன. பின்வரும் இரண்டு பிரதான கூட்டுப்பொருள்களும் சபை வளர்ச்சியடைவதற்கு தேவையானவை: வெற்றியடைய, வளர்ச்சியைக் குறித்து சம்பாஷித்தல் மற்றும் இலக்குகளை நிர்ணயித்தல். ஆனால் அதிக முயற்சி வேண்டும்.

வளர்ச்சியைக் கொடுக்கும்படி தேவனிடத்தில் நாம் அதிகம் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பொது ஜெபத்தை வழி நடத்திச் செல்பவர்கள் சபை 'வளர்ச்சிக்குக்' கர்த்தரை நோக்கிக் கெஞ்சுவதை நாம் செவிகொடுத்துக் கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசுவையன்றி நாம் 'ஒன்றும் செய்யமுடியாது' என இயேசு நமக்கு அறிவுறுத்தினார் (யோவா.15:5). ஒவ்வொரு நாளும் நம்முடைய தனிப்பட்ட தியானங்களில் சபை வளர்ச்சிக்கான விண்ணப்பத்தினை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பிராந்திய சபையின் தனிப்பட்ட அங்கத்தினர்கள் மற்றவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுவதற்கு தனிப்பட்ட முறையில் உண்மையான கடமை உணர்வினை கண்டிப்பாகப் பெற்றிருக்க வேண்டும். வெறுமனே ஆராதனையில் கலந்து கொள்ளுவது மட்டும் போதாது (இது மிகவும் முக்கியமானது என்றாலும்). சபைகள் எண்ணிலடங்காமல் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஏனென்றால் சபைகளின் தனிப்பட்ட அங்கத்தினர்கள் வெளியிலிருப்பவர்களை ஆராதனையில் கலந்து கொள்ளச் செய்யும்படிக்கு பிரசங்கிக்கப்படுகிற பிரசங்கத்தைக் கேட்கவும் அல்லது ஒரு வீட்டில் நடைபெறும் வேதாகம வகுப்பில் இணைந்து கொள்ளவும் அழைப்பதற்கு ஒரு ஒப்புக்கொடுத்தலை உருவாக்குகின்றனர். பிலிப்பு தன்னுடைய நண்பனை "வந்து பார்" என்ற இவ்விதமான அழைப்பினை; (யோவா.1:46). விடுத்தலின் மூலம் இழுத்துக்கொண்டான்.

நாமனைவரும் சபையைக் குறித்த எழுப்புதலை ஏற்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். கிறிஸ்தவர்களாக இருக்கின்ற சிலாக்கியம் அருளப்படுவதற்கு இதைச் செய்வது எவ்வளவு சுலபம்! ஆனால் ஆவிக்குரிய உணர்வின்மை சபையை ஒருபோதும் வளர்ச்சியடையச் செய்யாது. துன்புறுத்தப் பட்டவர்கள் தேவனுடைய 'குடும்ப அந்தஸ்தைப் பெறுவதில் துன்பங்களைப் பொருட்டாக எண்ணாமல் தங்களுடைய ஆசீர்வாதங்களை மீண்டும் எண்ணிப்பார்க்கவும், கிருபையினால் தாங்கள் பெற்றிருக்கிறவைகளுக்காகத் தாழ்மையுடன் தேவனை ஸ்தோத்தரிக்கவும் செய்கின்றனர். அந்திரேயா தன்னுடைய நம்பிக்கையின் நிச்சயத்தினாலும் உற்சாகத்தி னாலும் தன்னுடைய

சகோதரனை சீஷனாக மாற்றும்படிக்கு "மேசியாவைக் கண்டோம்" (யோவா.1:41) என்று சொல்லத் தூண்டினான்.

அங்கத்தினர்கள் மேற்கூறிய இவைகளையெல்லாம் நடைபெறச் செய்யும்போது சபைகள் வளர்ச்சியடைகின்றன. சபையின் பின்பகுதியில் வெறுமனே உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் நேரம் இதுவல்ல. எழுந்து கிரியை நடப்பிக்கக் கூடிய நேரம் இது. போதிக்கப்பட வேண்டிய ஜனங்களை நாம் கண்டுபிடிக்க தேவன் வாசல்களை திறக்கும்படிக்கு ஜெபிக்க வேண்டிய நேரம் இது - விழிப்பாயிருக்க வேண்டிய நேரம் இது - அழைப்பினை அதிகரிக்க வேண்டிய நேரம் இது.

*"நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம் ஆத்துமாக்களை*
*ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன்*
*ஞானமுள்ளவன்"(நீதிமொழிகள்11:30)*


*-The Voice of Truth International*

---

# சபை சரித்திரத்தின் ஒரு கண்ணோட்டம்

*Bro.Daniel Durairajan,Preacher*

விரிவுரை - 5



**ஒருமைப் பாட்டிற்கான நாட்டம்**

**முன்னுரை:**

1. மத உலகு இன்றைக்கு பிளவுபட்டு காணப்படுவது மிகவும் வேதனையானது.

2. இயேசு ஒருமைப்பாட்டிற்காக ஜெபித்தார் யோவான்17:20,21

3. புதிய ஏற்பாட்டில் பிரிவினைகள் கண்டிக்கப்படுகிறது 1கொரி.1:10-13

4. எப்படியாகிலும் ஒருமை பாட்டினை நிலைநிறுத்த மனிதன் வித்தியாசப்பட்ட திட்டங்களை வகுத்து முயற்சித்து வருகிறான்.

**திறனாய்வு:**

**I. சிலர் இப்படிப்பட்ட பிளவுகளுக்காக தேவனுக்கு நன்றி சொல்லுகிறார்கள்.**

a. அவர்கள் சொல்லுகிறார்கள், "ஒரு சபை மற்ற சபையை விட நல்லது" ஒருவன் எதை விசுவாசிக்கிறான் என்பது முக்கியமல்ல, அவன் விசுவாசிப்பதில் உண்மையாயிருக்கவேண்டும்.

b. பில்லி கிரஹாம் ஒருமுறை சொன்னார், "சபையை தேர்ந்தெடுப்பது என்பது ஒருவன் தன் தொப்பியை தேர்ந்தெடுப்பது போன்றது. நாம் ஆயத்த ஆடைக்கு தக்கதாக நம்மை ஆயத்தப்படுத்த கூடாது. நமக்கு எது சிறந்ததாகபடுகிறதோ அதைதான் நாம் தெரிவு செய்யவேண்டும்"

c. இப்படிப்பட்ட கருத்துக்கள் தேவனை ஒரு கலகத்துக்கு காரணராக்கி விடுகிறது 1கொரிந்தியர்14:33

**<u>II. இன்னும் சிலர் "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற கொள்கையை</u>**

**விடாப்பிடியாக பிடித்துக்கொண்டுள்ளனர்.**

a. இவர்கள் விரிப்பு கம்பளத்திற்கடியில் குப்பைகளை கூட்டுகின்றனர். எல்லா கொள்கை வேறுபாடுகளையும் பற்றிக் கொண்டு ஏற்றுக்கொள்ளதக்க தல்லாதவைகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

b. இது ஒரு உண்மையான ஒருமை பாடல்ல

c. சத்தியத்தை குறைத்து மதிப்பிட இப்படிப்பட்ட கரியங்களைச் செய்துவிடும்.

**III. நவீன "எக்குமெனிக்கல்" இயக்கம் எல்லா நாமகரணக் கூட்டத்தாரையும் ஒன்று சேர்த்து, ஒரு மகத்தான சபையாக ஏற்படுத்த முயற்சிக்கிறது.**

a. மனித கொள்கைகள் விவாதிக்கப்பட்டு, சமாதானம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

b. இப்படிப்பட்ட முயற்சிகளினால் இன்னும் அதிகமான பிரிவினைச் சபைகள் தோன்றியது.

1. ஆஸ்திரேலியாவில், "மெத்தடிஸ்ட்", "பிரஸ்படீரியன்", "காங்கிரகேஷனல்" சபைகளைல்லாம் ஒன்றுபட்டது.

2. இப்படி வெவ்வேறான பிரிவினர் ஒரே பிரிவினராக இணைந்து செயலாற்ற மறுக்கின்றனர்.

3. இதன் விளைவு, ஏற்கனவே 4 சபைகளாக இருந்தவை தற்பொழுது 3 சபைகளாகியுள்ளது அவ்வளவுதான்.

**IV. நாம் தேவனுக்குப் பிரியமாக எப்படி ஒன்று சேர இயலும்.**

a. பரிசுத்த வேதாகமத்தை மாத்திரம் பின்பற்றுவதினால், சாத்தியமாகும். இதிலிருந்து ஒன்றை கூட்டவோ, குறைக்கவோ கூடாது. அப்படியிருக்குமேயானால் மெய்யான ஒருமை பாட்டை ஏற்படுத்துவது இயலும்.

b. பரிசுத்த வேதாகமத்தை விசுவாசித்து கீழ்ப்படிகிற எல்லோருமே இயல்பாகவே பரிசுத்த வேதாகமத்தை விசுவாசித்து கீழ்ப்படிகிற யாவரோடும் ஒன்றுபட்டு இருப்பார்கள்.

**முடிவுரை:**

1. கிறிஸ்துவின் விசுவாசிகள் என்றழைத்துக் கொள்ளுகிறவர்கள் மத்தியில் காணப்படும் பிரிவினைகள் மகிமை சீர்குலைவும், பாவமுமாகும்.


2. இதற்கு தீர்வு கருத்தரங்குகளினாலோ அல்லது உயர்மட்டக் குழுக்களினாலோ அல்லது ஒருங்கிணைப்பு கூட்டங்களினாலோ சாத்தியமில்லை. மாறாக தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதினாலும், போதிப்பதினாலும் அதின்படி நடப்பதினாலே மாத்திரம் சாத்தியமாகும்.

**நடப்புச் செய்திகள்**

- தமிழகத்தில் அடுத்த ஆண்டு சமச்சீர் கல்வி அமலுக்கு வருகிறது.
- மன்னார் வளைகுடா கடல் பகுதியில் 113 வகையான வண்ண மீன்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- வட மாநிலங்களில் நிலத்தடி நீர் ஆண்டுக்கு ஒரு அடி குறைகிறது.
- அமெரிக்க நிறுவனம் 2 ஸ்கிரீன்களுடன் லேப்டாப் கம்யூட்டரை தயாரித்துள்ளது.
- சந்திரயான் திட்டத்தை கைவிட்டது இஸ்ரோ.

# உங்கள் விருப்பம் எது?
# அல்லது
# எவற்றை நீங்கள் விரும்புகிறீர்கள்?

***Bro. R. BLESSON, Preacher***



பிரியமானவர்களே உயிர்த்தெழுந்த உத்தமர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த இதழின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த பூமியில் வாழ்கின்ற எல்லா மக்களுக்குமே ஏதேனும் ஒரு விருப்பம் இல்லாமல் இருப்பது இல்லை. பள்ளிக்கு செல்கின்றவர்கள் நான் தான் இப்பள்ளியில் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்று விரும்புவார்கள். வெளியிடங்களுக்கு வேலைக்கு செல்கின்றவர்கள் ஏற்ற நேரத்தில் பேருந்து வரவேண்டும் என்று விரும்புவார்கள். ஒரு வாலிபர் தனக்கேற்ற நல்ல வாலிப பெண்ணை விரும்புவான், இப்படி விரும்புதல் என்று பார்த்தால் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். ஆனாலும் அன்பு தேவனுடைய பிள்ளைகளே வேதாகமத்தில் அப். பவுலைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அவருடைய விருப்பம் எதுவாக இருந்தது, அவரது விருப்பத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் பாடம் அல்லது நமது விருப்பமும் என்னவாக இருக்கவேண்டும் என்று தியானிப்போம்.

**1. அப்.பவுலின் விருப்பம் எதுவாக இருந்தது?**

ரோம.7:21-ல் நன்மை செய்ய விரும்புகின்ற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன் என்று சொல்வதை நாம் வாசிக்கிறோம். அப்படியானால் பவுல் நன்மைசெய்யவேண்டும் என்று விரும்பினதாக வேதம் கூறுகிறது.

ரோம.10:1-ல் இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும், நான் தேவனை நோக்கி செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது. அன்பானவர்களே, இவ்விரண்டு வசனங்களின் மூலமாக நாம் பார்க்கும்போது நன்மை செய்யவேண்டும் என்ற கருத்து புலப்படுகிறது. இதே அப்.பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் கலா.6:9,10 வசனத்தில் நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக, 10-ம் வசனத்தில் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்தாருக்கும் நன்மை செய்யக் கடவோம் என்று கூறுவதை பார்க்கிறோம். எனவே நன்மை செய்வது என்பது இப்புவியில் இன்றியமையாத ஒன்றாகும். ஏன் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் நன்மை செய்கிறவராகவே சுற்றித்திருந்தார். இன்று நம்முடைய நிலைமை எப்படியிருக்கிறது.

அதிலும் ஒருசிலர் ஒரு நாளில் ஒருவருக்காவது தீமைசெய்யவில்லை என்றால் அவர்களுக்கு அன்றைய தினம் தூக்கமே வருவதில்லையாம். நான் ஊழியம் செய்யும் ஒரு பகுதியில் 28வயதுள்ள சகோதரர் என்னிடம் இதையே சொன்னார். ஏதேனும் ஒரு பிரச்சினை, அடிதடி, காவல் நிலையம் போகவில்லை என்றால் எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும் எனறார். அது மதியீனமான செயல் அல்லவா? இன்றும் அநேகருடைய நிலைமை இதுவாகவே இருக்கிறது.

அப். 20:24-ல் ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன், என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். அப்.பவுலின் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்கள் வேதனைகளை நாம் அறிவோம். அப்.20:23-ல் கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறது என்பதாய் வாசிக்க முடிகிறது. எனக்கும் பலவேறு கஷ்டம் பாடுகள் நிறைந்த வாழ்க்கை இருக்கிறது. ஆனாலும் அவற்றை எல்லாம் நான் எண்ணி கவல்லைப்படமாட்டேன். ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடித்தேன் (2தீமோ.4:7). அத்தோடு ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகின்றார். இன்றுள்ள நிலமையில் ஊழியர்களின் நிலைமை என்ன? அது சபை விசுவாசிகளானாலும் சரி, அல்லது ஊழியர்களானாலும் சரி, நாம் ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிறோமா? சற்று சிந்திப்போம். பவுலைப்போல நன்மை செய்யவேண்டும், உபத்திரவத்தின் மத்தியிலும் சுவிசேஷம் அறிவிக்கவேண்டும். ரோம.1:15 என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க விரும்புகிறேன் என்கின்றார். இன்று எனது குடும்பம் மட்டும் இரட்சிக்கப்பட்டால் போதும் என்று அநேகர் விரும்புகின்றார்கள். அப்படியல்ல. மாற்.16:16 நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என மரித்து உயிர்த்த ஆண்டவராகிய இயேசு தமது பதினொரு சீஷர்களுக்கும் இதையே கூறுகின்றார். நம்மால் உலகம் முழுவதும் போக முடியாவிட்டாலும் நமது கிராமம், நமது மாவட்டம் முழுவதுமாக சுவிசேஷம் அறிவிக்க வேண்டும். மற்றவர்களும் இரட்சிக்கப்படவேண்டும் என்ற விருப்பம் நமக்குவேண்டும். ஒரு பழ மொழிகூட உண்டு "யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்" என்பது போல நாம் கிறிஸ்துவின் மூலம் பெற்றுக்கொண்ட ஆனந்தத்தை, இரட்சிபை என்றும் அழியாத சந்தோஷத்தை மற்றவர்களும் பெற வழி செய்ய வேண்டும். சுவிசேஷம் அறிவிக்க நாம் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

**2. நாம் எவற்றை விரும்ப வேண்டும்?**

மற்றவர்கள் எல்லோரும் நமக்கு உதவவேண்டும் நன்மையானதையே செய்யவேண்டும் என்று விரும்புகின்றோம். நம்மை ஒருவர் அடித்துக்கொண்டே

இருப்பதையோ அல்லது அடிமைப்படுத்தி வைத்திருப்பதையோ, கொடுமைப்படுத்துவதையோ நாம் விரும்புகிறதில்லை. மத்.7:21. நமக்கு மற்றவர்கள் நல்லதையே செய்து கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புவது போல நாமும் மற்றவர்களுக்கு நன்மையைத் தான் செய்யவேண்டும். கலா.6:9 நன்மை செய்வதில் நாம் சோர்ந்துபோகக்கூடாது.

மாற்.12:37 அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள். இன்று சத்தியத்தை கேட்கும்போதும், அதை வாசிக்கும் போதும் உண்மையிலேயே விரும்பி செய்கின்றோமா? அல்லது சபையில் சேர்ந்துவிட்டேன், என்ன செய்வது ஊழியரின் கட்டாயத்தின் பேரில் சபைக்கு சென்று கடமைக்காக சத்தியத்தை கேட்டுவிட்டு போகிறோமா? கிறிஸ்துவுக்குள்ளாக எதை செய்தாலும் விரும்பி செய்யவேண்டும். உபதேசத்தை எதற்காக விருப்பப்பட்டு கேட்கவேண்டும்? ஏனென்றால் 2தீமோ.4:4 சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்கு சாய்ந்துபோகும் காலத்தில் இருக்கிறோம் என்கிறது. மத்.16:24 இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால் அவன் தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்றார். ஏசா.53-ம் அதிகாரத்திலும், நான்கு சுவிசேஷப் புத்தகங்களிலும் இயேசுகிறிஸ்து இப்புவி மானிடர்களுக்காய் பட்ட பாடுகள், அடிகள், வேதனைகளை நமக்கு போதிக்கிறது. நாமும் பாடுகளை எடுத்துக்கொண்டு அவரை பின்தொடரவேண்டும்.

இதை வாசிக்கின்ற அன்பு சகோதரனே, சகோதரியே, நண்பரே அப்.பவுலைப்போல நாமும் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட யாவருக்கும் நன்மை செய்வோம், மற்றவர்கள் இரட்சிப்படைய விரும்புவோம், சுவிசேஷம் கேள்விப்படாதவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்போம். அதை விருப்பத்தோடு அறிவிப்போம். நம்முடைய மரண பரியந்தம் இயேசுவையே பின்பற்றிச்செல்ல விரும்புவோம். இவற்றை விரும்பவும், அதையே செய்யவும் தேவன் நமக்கு அருக்கிரகம் செய்வாராக! ஆமென்.

வாலிபனே முழங்கிடு
நான் ஒரு கிறிஸ்தவன் என்று!
வாலிபனே முழங்கிடு
இயேசுவே கிறிஸ்து என்று!
வாலிபனே முழங்கிடு
பொல்லாங்களை ஜெயித்தேன் என்று!
வாலிபனே முழங்கிடு
நான் கிறிஸ்துவுக்கு நல்ல போர்சேவகன் என்று!
வாலிபனே முழங்கிடு
ஒரே சரீரம் அது கிறிஸ்துவின் சபையாம் என்று!

P.டேவிட்



சரித்திர ஆய்வு


# சத்திய வார்த்தையில் சரித்திரம் -20

## தேவனின் பிள்ளைகள் - Children of God

**Bro. John S.Nathan,** Gospel Minister
Christian City Church of Christ,
Minjur -601 203, S.INDIA.
Mobile: 94444 43378

**ஒரே**

தேவன்
கர்த்தர்
அஸ்திபாரம்
சுவிசேஷம்
மந்தை
சபை
பலி



பரலோகத்திலுள்ள நமது பரிசுத்த தேவன், உலகத்தோற்றமுதற்கொண்டு உலக முடிவுமட்டும் பிறந்து வாழும் மக்களினத்திற்கு பரலோகத்தின் பரிசுத்த பிதாவாக இருக்கிறார். எனவே நீ தேவனுடைய சொந்தமான பிள்ளை, உனக்காவே அவர் உலகத்தில் காணக்கூடியவைகள், காணக்கூடாதவைகள் அனைத்தையும் உண்டாக்கி, உனக்கு எல்லாவற்றையும் இலவசமாகவே வழங்கிடவிரும்பினார். பின்பு தேவன்: தமது சாயலாகவும் (பிதா, குமாரனின்) நமது சாயலாகவும் நமது (தமது) ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி.1:26) ஏதேனில் ஆதாம் மற்றும் ஏவாளுக்காகவே எல்லாவற்றையும் சிருஷ்டித்தபின் "...நீ தோட்டத்திலுள்ள சகல (எல்லா) விருட்சத்தின் (மரத்தின்) கனியையும் புசிக்கவே புசிக்கலாம்" ஆதி.2:16. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப்பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகல (எல்லா) பிராணிகளையும் ஆளக்கடவர்கள்" ஆதி.1:26. அவர்கள் அவைகளை ஆளும் அதிகாரத்தையும் பெற்றனர். ".... நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப்பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" ஆதி.1:28. வானம், பூமி இவைகளில் உள்ளவைகளை அவரின் "வார்த்தையினால்" உண்டாக்கினார், (2-ம்) தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார்; வெளிச்சம் உண்டாயிற்று (ஆதி.1;3). ஆனால் மனிதனை சிறப்பானவனாக தன்னுடனே கூட இருக்க அவனை பூமியின் மண்ணினாலே (அவரைப்போலவே) உருவாக்கி, (தன்னுடைய) ஜீவ சுவாசத்தை (ஜீவனை) அவன் நாசியிலே ஊதினார்; (தனது ஜீவனை அவனுக்களித்தார்) ஆதி.2:7. எனவே மனிதர்களாகிய நாம் அனைவருமே தேவசாயலாகவே சிருஷ்டி;கப்பட்டோம். ஆதி.1:27. எவ்விதமான மாற்றம், தோற்றமும் வேறுபடாமல் உள்ளோம். ஏனெனில் நாம் அவரைப்போலவே அவருடைய ரூபத்தின்படியே

உண்டாக்கப்பட்டோம். (நல்லவேளை, மக்களினம் பயப்படும்படியாய் அவருக்கு பலகைகளோ, பலமுகங்களோ, கண்களோ இல்லை) ஆகையால்தான், அவர் நமது ஒரே தேவன், என அழைக்கப்படுவதால் அவரும் நாமும் மேன்மைபாரட்டி மகிழும்படியாய் உள்ளோம். ஏதேன் தோட்டத்தில் பாவத்தில் , சாபத்தில், பரிசுத்தத்தை இழந்துபோன ஆதிதம்பதியர் ஆதாம், ஏவாள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் விலையின்றி சாத்தானுக்கும், மரணத்திற்குமுள்ளானர். இத்துடன் பரிசுத்தமுள்ள தேவனுடன் உள்ள உறவு உரிமை அனைத்தையும் இழந்தனர், என்ற போதிலும் அவர்களின் நிர்வாணத்தை மறைத்திட தேவன் அவர்களுக்கு தோலாடை உடுத்தினார். ஆதி.3:2. தேவபிதாவோடிருந்து "அவர் (அளிக்க இருக்கும்) இரட்சிப்பின் வஸ்திரத்தை (உனக்கு) எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை" (ஏசா.61:10) உடுத்தி மகிழவேண்டியவன், தேவனுடன் இருக்கவேண்டியவன் தோலாடையுடனே துக்கத்துடனே, கண்ணீருடனே, அவமானத்துடனே எல்லா இன்பத்தையும் இழந்து துன்பத்தை, மரணத்தை சுமந்து கொண்டு தேவ சந்நிதியை விட்டகழ்கின்றான். தேவபிதாவும் அவனின் அவசியமான பாதுகாப்பிற்காக பயமின்றி பத்திரமாக வாழ்ந்திட தனிமைபடுத்தப்பட்ட அவனுக்கு "தனிமையானவர்களுக்கு வீடு, வாசல் ஏற்பத்தி சங்.68:6. அவரே வாசலாக இருந்து அவனது வீட்டில் உள்ளவர்களுக்கு ஆசிர்வாதத்தை வழங்கினார் (ஆதி.4:7). அவர்கள் அவருக்கு பக்தியுள்ள ஆராதனை செய்தனர், ஜீவ பலியை செலுத்தினர். "நான் சாவாமல் பிழைத்திருந்து கர்த்தருடைய செயல்களை அறிவிப்பேன்" சங்.118:17. நீதிமானாகிய ஆபேல் தன் அகாலமரணத்திலே நம்பிக்கையுடையவனாக" நீதி.14:32 மிகச் சொற்பகாலமே வாழ்ந்து காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தி தேவனே சாட்சியளிக்கும்படி வாழ்ந்து அவன் மரித்து (இன்றும்) இன்னும் பேசுகிறான்" எபி.11:4 தேவன் ஆதாமையும் அவனின் கீழ்ப்படியாத அவிசுவாசமான சந்ததியாரை வெறுக்காமல், மறக்காமல், இன்றும் நேசித்து, ஆசிர்வதிக்க விரும்புகிறார். அவர்களை கண்ணின் மணிகளைபோல காப்பாற்றுகிறார். பாவியான மனிதன், பரிசுத்த மடைந்து தான் இழந்துபோன ஆதிமேன்மையையும், தேவ அன்பையும் ஐக்கியத்தையும், தேவமகிமையையும் இன்றே பெற்றிடமுடியும்!

நம்மை மறுபடியும் பரலோக தேவனிடத்தில் சேர்க்கும்படியாக, நமக்கு விடுதலை, (இரட்சிப்பு) மீட்பு அளிக்க, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட இரண்டாம் ஆதாமாகிய இயேசு கிறிஸ்து, தமது பரலோகபிதாவின் சித்தத்தை நிறைவேற்றிடவும் நம்மில் அன்புகூர்ந்து இன்முகத்துடன் நாம் சுமக்க வேண்டிய ஈனச் சிலுவையை ஏளனம் செய்தோரிடையே சிலுவையை சுமந்து கல்வாரி நாயகன் நகரத்திற்கு புறம்பே நமக்காக பாடுபட்டு குருதிசிந்தி கோரமரணமைடைந்தார். இதனை சாத்தானும் அவனின் கூட்டத்தாரும் கூடி மகிழ்ந்தனர். ஆனால் மூன்றாம் நாள், தாம் சொன்னபடியே வெற்றிவேந்தராக இயேசு கிறிஸ்து முன்னறிவித்தப்படியே

உயிர்த்தெழுந்தார். இதனால் அவர் விண்ணிலும், மண்ணிலும் மகிமைப்படுத்தப்பட்டார்.

நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் ரோம.13:32 (சங்.2:7). இயேசுவை (தேவன்) எழுப்பினதினாலே மரணத்தினின்று முதன்முதலாக அழிவை காணாமல் (ஜெநிப்பித்ததினாலே) உயிர்த்தெழுந்ததினாலே, தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவருடைய பிள்ளையாகிய இயேசு நமக்கு நிறைவேற்றினார் ஆப்.13:33. முதல் ஆதாமின் பாவ சந்ததியானவர்களாகிய நாம் இரண்டாம் ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவைப்போல், அவர் தேவனுக்கு கீழ்ப்படிந்ததைப்போல நாமும் கீழ்ப்படிந்தால் தேவபிதாவானவர் நம்மையும், கீழ்ப்டிகின்ற அனைவரையும் நோக்கிப்பார்த்து "இவன் என் நேசகுமாரன் இவனில் நான் பிரியமாயிருக்கிறேன்" என்று கூறுவதுடன் நம்மை மகிமைபடுத்தி, நாம் இழந்த எல்லா மேன்மையையும் அதிகாரத்தையும் அளிக்க விரும்புகிறார்.

தேவனுடைய சுவிசேஷத்தை கேட்டு, மனந்திரும்பி, விசுவாசித்து பாவ அறிக்கை செய்து நமது பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெறும்போது பரிசுத்தராகி, பரிசுத்த ஆவியின் வார்த்தை, பெலத்தை பெறலாம். அவரும் நம்மை அவருடைய பிள்ளையாய் ஏற்றுக்கொள்ள விரும்புவதால் "நாம் புத்திரராயிருக்கிறபடியால், அப்பா abba அரேமிய வார்த்தைக்கு அப்பா என்று பொருள் படும். இவ்வார்த்தை மேலும் இரண்டு இடங்களில் கூறப்பட்டுள்ளது. மாற்.14:36; ரோம.8:15; கலா.4:6. சத்தியத்திற்கு கீழ்ப்படிந்த நாள் முதற் கொண்டு நாம் அடிமைத்தனத்தின் ஆவியைப்பெறாமல் அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற சுவிகாரத்தின் (abba) ஆவியை (விடுதலையின் ஆவியை) அதிகாரத்தை பெறுகிறோம் (ரோம.8:15) இதனைக் குறித்து பரிசுத்த ஆவியானவரும் சாட்சிகொடுக்கிறார் வசனம்16.


**மணமகன் தேவை**

*1. 31 வயதுள்ள பெங்களூரில் செவிலியர் வேலை செய்யும் பெண்ணுக்கு தொடர்பு சகோ.லெஸ்லி லாரன்ஸ் ஊழியர் பெங்களூர். 09986435098*

*2. 34 வயதுள்ள M.A. தனியாரில் பணிபுரியும் தொடர்பு சகோ. மனுவேல் ஊழியர் தாம்பரம் சென்னை 9884464924*

**மணமகள் தேவை**


*1. 30 வயதுள்ள M.A. படி;தத கிறிஸ்துவின் சபை ஊழியருக்கு தொடர்பு சகோ.பிரான்ஸிஸ் டேவிட் போதகர் புதுடில்லி 09810763321*

*2. 340 வயதுள்ள பளஸ் 2 படித்த தனியாரில் பணிபுரியும் கிறிஸ்துவிக்குள் உள்ள மணமகனுக்கு தொடர்பு சகோ. சுந்தர்ராஜ் 9884831688*

# நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்

சிறுவர் பகுதி

**வேத பகுதி :**
**யோவான் 13:21-30**



ஒரு முறை இயேசு பன்னிரண்டு சீஷர்களோடு இருக்கும்போது அவர் ஆவியில் கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்றார். அப்பொழுது யாரைக் குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்தார்கள். அந்தச் சமயத்தில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த யோவான் அவருடைய மார்பிலே சாய்ந்து கொண்டு ஆண்டவரே, அவன் யார் என்று கேட்டான். இப்படி கேட்கும்படியாக சீமோன் பேதுரு அவனுக்குச் சைகைகாட்டினான்.

இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன் தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அதை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுதுதான் இயேசு அவனை நோக்கி நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்.

ஏன் அவனைப் பார்த்து இப்படி சொன்னார் என்று தெரியுமா? அவன் இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான், பிசாசானவனும் அவன் இருதயத்தைத் தூண்டியிருந்தான். தான் பூமிக்கு வந்த நோக்கம் நிறைவேறத்தக்கதாகவும், தேவனுடைய ராஜ்யம் சீக்கிரத்தில் சம்பவிக்கதக்கதாகவும் அவர் அவனைப் பார்த்து நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்று சொன்னார். அப்போஸ்தல ஊழியம் என்பது எவ்வளவு அருமையான ஊழியம் அந்த அற்புதமான ஊழியத்தை இழந்தான். இன்றைக்கு நாமும் கூட சிலவேளைகளில் இந்த யூதாசைப்போல மாறிவிடுகிறோம். பணத்திற்கு ஆசைப்பட்டு தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக செயல்பட ஆரம்பிக்கின்றோம். அப்படிச்செய்கையில். நாமும் ஆண்டவரால் கைவிடப்படுவோம்!

**மனப்பாட வசனம்**

"அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்து போகாமல், கடைசிநாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது" (யோவான்6:40).

# வேத அறிவுப் போட்டி எண்.109

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்

1. எவைகள் மாயையும் மகா எத்துமான கிரியையாயிருக்கிறது?
2. இயேசுவைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்களா?
3. பிரசவிக்கப்பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ என்று எவர் சொல்லுகிறார்?
4. தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், யூதருக்கும், கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்த அப்போஸ்தலன் யார்?
5. மனுஷன் அநேக வருஷம் ஜீவித்து, அவைகளிலெல்லாம் மகிழ்ச்சியாயிருந்தாலும், அவன் எந் நாட்களையும் நினைக்கவேண்டும்?
6. அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் என்ன செய்யப்படாதவைகள்?
7. பொன்னும் மிகுதியான முத்துக்களும் உண்டு; அறிவுள்ள உதடுகளோ எப்படிப்பட்டது?
8. பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களா?
9. கர்த்தர் கபடற்றவர்களை என்ன செய்கிறார்?
10. நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல என்று பவுல் எந்த சபையாருக்கு எதுகிறார்?

**Website: www.thewordofchristindia.com**

"கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்" எபேசியர் 5:10

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi Press14/13/24 melamanthai street, Batlagundu - 624 202.
Editor: B.Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Sep.2009.

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in
Website: www.thewordofchristindia.com

**ஆராதனை நேரம் ஞாயிறு காலை 8.30 மணி**
**தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள**
**யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

**உங்கள் வானொலியில்**

**இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனி கிழமை மாலை 5.30 முதல் 5.45 மணி வரை கேளுங்கள் மேலும்**

**உங்கள் தொலைக்காட்சியில்**
TAMILAN TV - Every Monday 6.00 - 6.15 a.m
IMAYAM TV - Every Wednesday 6.30 - 6.45 a.m

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**
**தேவைக்கு உடனே ரூ.15/-**
**அனுப்பி பெற்றுக்கொள்ளவும்**

**டிவி மற்றும் ரேடியோவில் வெளி வந்த**
**தேவ செய்திகள் அடங்கிய சிடி மற்றும்**
**டிவிடிக்கள் தேவைப்படுவோர் ரூ.100/-**
**அனுப்பி பெற்றுக்கொள்ளவும்**

**அனைத்து தொடர்புக்கும்**

**Monthly Magazine**

**To**

*If undelivered please return to:*
**From**

**Editor**
**THE WORD OF CHRIST**
**P.O.Box-5**
**Batlagundu - 624 202**
**S.INDIA.**